இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

இந்திய இலங்கை டிஜிட்டல் பங்குடைமையை முன்னேற்றல்: டிஜிட்டல் இலங்கை 2026 மாநாட்டில் உயர் ஸ்தானிகர் உரை

2026 நவம்பர் 26ஆம் திகதி WION மற்றும் SAP ஆகிய நிறுவனங்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் இலங்கை 2026 மாநாட்டில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் உரை நிகழ்த்தியிருந்தார். அவர் தனது உரையில் இந்தியா இலங்கை இடையிலான இருதரப்பு பங்குடைமையின் முக்கிய ஆதாரங்களாக தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியிருந்தார். கடந்த தசாப்தத்தில் இந்தியாவில் ஏற்பட்ட டிஜிட்டல் நிலைமாற்றத்தின் தீவிரம் மற்றும் விஸ்தீரணம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டிய அவர், அனைவரையும் உள்ளடக்கியதன்மை, இயங்குதிறன் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றின் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டு மக்கள் அளவிலான டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு திட்டங்களை உருவாக்குவதில் இந்தியாவின் அனுபவம் தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் மக்களுக்கு அதிகாரமளிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இந்தியாவின் அணுகுமுறையையும், இலங்கையின் அபிவிருத்தி சார் முன்னுரிமைகளுக்கு அமைவாக தனது அனுபவங்களையும் இலங்கையுடன் பகிர்ந்துகொள்ள இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2. உயர் ஸ்தானிகர் அவர்கள் தனது உரையில், இலங்கையின் தனித்துவ அடையாள அட்டை செயல்திட்டத்துக்காக இந்தியா வழங்கியுள்ள 25 பில்லியன் இலங்கை ரூபா ஆதரவு குறித்தும் கருத்துகளை முன்வைத்திருந்தார். NASSCOM Disha செயல் திட்டம், ஐஐடி மெட்ராஸ் பிரவார்டக் ஆளுமைவிருத்தி செயல்திட்டம், இந்திய இலங்கை புத்தாக்க மன்றம், நாலந்தா கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட ரிங்கரிங் ஆய்வு கூடம் போன்றவை ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான புத்தொழில் மற்றும் புத்தாக்க அமைப்புகள் மட்டத்தில் வளர்ந்துவரும் தொடர்புகள் குறித்தும் உயர் ஸ்தானிகர் அவர்கள் இங்கு குறிப்பிட்டிருந்தார். டித்வா புயலுக்கு பின்னரான மீட்சி மற்றும் மீள்நிர்மாண பொதியாக இந்தியாவால் வழங்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் குறித்து தெரிவித்த உயர் ஸ்தானிகர் அவர்கள், அனர்த்த விளைவுகள் குறித்த மீளாய்வுக்கான தொழில்நுட்பம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் மூலமான முன்னெச்சரிக்கை முறைமை ஆகியவை தொடர்பாக தற்போது காணப்படும் ஒத்துழைப்புகள் தொடர்பாகவும் தெரிவித்திருந்தார்.

3. மேலும் செயற்கை நுண்ணறிவு சார் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்த உயர் ஸ்தானிகர், சர்வம் AI மற்றும் இலங்கையின் டிஜிட்டல் அமைப்புகள் இடையில் குறிப்பாக சிங்கள மொழி அடிப்படையிலான மாதிரிகளின் அபிவிருத்தி உள்ளிட்ட அண்மைய ஈடுபாடுகளையும் வரவேற்றிருந்தார்.

4. அனுபங்களை பகிர்தல் என்ற நிலையிலிருந்து ஒன்றிணைந்து திறன்களை கட்டியெழுப்பல் என்ற நிலையை நோக்கி இந்தியாவும் இலங்கையும் பயணிக்கின்றன. இரு நாடுகளினதும் மக்களின் அபிலாஷைகளை நிவர்த்திசெய்யும்வகையில் புதுமையானதும் பாதுகாப்பானதும் அனைவரையும் உள்ளடக்கியதுமான டிஜிட்டல் எதிர்காலத்தை உருவாக்குவதற்காக இலங்கையுடன் இணைந்து பயணிப்பதற்கு இந்தியா தயாராக உள்ளது.

****

கொழும்பு
27 நவம்பர் 2026